விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 02 திங்கட்கிழமை (18.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 264

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து



## யாழிற்கான தரைவழிப் போக்குவரத்திற்கு கேரதீவு-சங்குப்பிட்டி பாதையை திறக்க முடிவு

### அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தகவல்

(நமது நிருபர்)

யாழ்.குடாநாட்டிற்கான தரை வழிப்பாதையாக கேரதீவு-சங்குப் பிட்டியூடான பூநகரி பாதையை திறப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக தேசியப் பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

குடாநாட்டிற்கான ஒரே ஒரு தரை வழிப் பாதையான ஏ-9 வீதியில் முகமாலைப் பகுதியில் இடம்பெற்று வரும் மோதல்களினால் தற்போது அப் பாதையை திறப்பதற்கு அரசு உத்தேசிக்கவில்லையெனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் பூநகரி பாதையைத் திறப்பதனூடாக யாழிற்கான தரை வழிப்போக்குவரத்தை ஏற்படுத்த முடியுமாகையால் அது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு அரசு (04 ஆம் பக்கம் பார்க்க)

# கல்முனைக் கடற் பரப்பில் ஆயுதக்கப்பல் மூழ்கடிப்பு

### புலிகளின் கப்பல் என்கிறது கடற்படை

(கொழும்பு)

கிழக்கே கல்முனைக் கடற்பரப்பில் ஆயுதக்கப்பல் ஒன்றை கடற்படையினர் மூழ்கடித்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார். அக் கப்பல் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிச் சென்ற போது தாம் அதனை மூழ்கடித்ததாக கடற்படை தெரிவித்துள்ளது.

இதேவேளை அக்கப்பலுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரசபையின் வாகனம் மீது அளவெட்டியில் துப்பாக்கிச் சூடு

### ஒருவர் பலி; இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டியில் மின்சார சபையின் வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஊழியர் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினமிரவு 8.30 மணியளவில் அளவெட்டி மல்லாகம் வீதியில் இடம் பெற்றுள்ளது. மின்சார திருத்த வேலைகளை முடித்துவிட்டு குறிப்பிட்ட வீதியூடாக திரும்பிக்கொண்டிருந்தபோதே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதன்போது ஏழாலையைச் சேர்ந்த நாகேந்திரன் லிங்கநாதன் (வயது 48) என்பவரே உயிரிழந்தார். வாகன ஓட்டுநரான பிலிப் லோறன்ஸ் (வயது 51) மற்றும் கெங்காதரன் (வயது 45) ஆகிய இருவரும் காயமடைந்தனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று இளைஞர்கள் வவு.இல் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா உப்பிலாங்குளம் பைற்றர் மைதானப் பகுதியில் மூன்று இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 5.30 மணியளவில் அடையாளம் தெரியாதோரால் அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தினையடுத்து இராணுவத்தினரால் சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 5 இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாக வவுனியாச் செய்திகள் தெரிவித்தன. (ச)

## யாழிற்கான கப்பல் சேவையை செஞ்சிலுவைச் சங்கம் நிறுத்தியது!

### அதன் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கான அத்தியாவசியப் பொருட்களை கப்பல் மூலம் கொண்டு செல்லும் பணிகளை நிறுத்துவதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளதாக செய்திகள் தெரிவித்தன.

இது தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் டேவிட் விக்னதி கூறியதாவது, கப்பல் போக்குவரவு தொடர்பில் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் பொது நிலைப்பாட்டுக்கு வரும் வரை அனைத்து கடல்சார் பணிகளும் இடை நிறுத்தப்படும்.

நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் பாதுகாப்பு கருதி இம் முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

யாழ்.மக்களை பட்டினியில் சாகவிட முடியாது எவ்வாறாயினும் யாழ்.குடாநாட்டுக்கான பொருட்கள் கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார். (ச-5)

## இந்தியப் பிரதமருடன் ஜனாதிபதி மகிந்த சந்திப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கை ஹவானாவில் சந்தித்துப் பேசியுள்ளார்.

இச் சந்திப்பின்போது இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் மற்றும் சர்வதேச விவகாரங்கள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அணிசேரா நாடுகளின் 14 ஆவது உச்சி மாநாட்டின் கலந்து (04 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் சூடு குழந்தை உட்பட இருவர் பலி

(திருகோணமலை)

திருகோணமலை அன்புவெளிபுரத்தில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தவர்கள் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் இரண்டு வயதுக்குழந்தை உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று மதியம் வீட்டினுள் இருந்து ஐவர் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த போது வீட்டினுள்புகுந்த வெள்ளைவானில் வந்த இனந்தெரியாதோர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதில் இரண்டு (04 ஆம் பக்கம் பார்க்க)

## இங்கிலாந்தின் சிறப்புத்தூதுவர் விரைவில் இலங்கை வருகை!

(கொழும்பு)

அமைதி முயற்சிகள் தொடர்பாக ஆராய்வதற்காக இங்கிலாந்து நாட்டின் சிறப்புத் தூதுவர் விரைவில் இலங்கைக்கு வருகைதரவுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவுடன் கடந்த மாதம் நடந்த திடீர் சந்திப்பைத் தொடர்ந்து சிறப்புத்தூதுவரை அனுப்ப இங்கிலாந்து பிரதமர் ரொனிபிளேயர் முடிவுசெய்திருப்பதாக கூறப்படுகிறது.

இதனிடையே இங்கிலாந்து எதிர்க்கட்சியான கொன்சர் (04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருட்களின் விலைகளை குறைப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார்.

இம் மாத இறுதிக்குள் அது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் உறுதியளித்துள்ளார்.

உலக சந்தையில் உள்ள எரிபொருட்களின் விலையைக் கருத்தில் கொண்டு விலை குறைப்புக் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனக் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். அமைச்சரின் இவ்வறிப்பை தனியார் பேருந்து உரிமையாளர்கள் வரவேற்றுள்ளனர்.

இதனையடுத்துதனியார் பேருந்து உரிமையாளர்களினால் மேற்கொள்ளப்படவிருந்த பணிப்புறக்கணிப்பு இரு வார காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கூட்டமைப்பினருடனான சந்திப்பு நாளை இடம்பெறும் என அறிவிப்பு

## புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாளையே சந்தித்துப் பேசவுள்ளனர்.

இச் சந்திப்புக்கான அனுமதி இந்தியப் பிரதமர் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று முன்தினம் இரவு தெரிவித்தது.

ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆனால் அதில் எதுவித உண்மையும் இல்லை எனத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, கியூபா பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியப் பிரதமர் நாடு திரும்பியதும் நாளை சந்திப்பு நடைபெறும் என்று தெரிவித்துள்ளது.

இச் சந்திப்புக்கான ஏற்பாடுகளை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. செய்திருப்பதாகவும் தெரியவந்தது.

அதேவேளை இச் சந்திப்பை முடித்துக் கொண்டு மீண்டும் தமிழகத்திற்குத் திரும்பவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழக முதல்வர் கருணாநிதியைச் சந்திப்பதற்கான முயற்சிகளிலும் ஈடுபடுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இன்று அதிகாலையே கியூபாவிலிருந்து டில்லிக்குத் திரும்புவார் என தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# இளைஞனின் சடலம் அடையாளம் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் மூன்று கோயில் பகுதியில் மீட்கப்பட்ட இரு இளைஞர்களின் சடலங்களில் ஒன்று இனங்காணப்பட்டுள்ளது. இனங்காணப்பட்ட சடலம் உடுவில் வீதி ஆலடியைச் சேர்ந்த ரஞ்சன் ஜெகதீபன்(வயது-19) என்பவருடையது என உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்ற கடந்த வெள்ளிக்கிழமை காலை உறவினரின் பிறந்தநாள் வைபவம் ஒன்றிற்குச் சென்று நண்பரொருவருடன் மோட்டார் சைக்கிளில் வீட்டிற்கு வந்து விட்டு வெளியில் சென்றதாகவும் அதன் பின் அவர் வீடு திரும்பவில்லை எனவும் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று கியூபாவிலிருந்து நியூயோர்க் பயணம்

(கொழும்பு)



நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள்சபையின் 61-வது அமர்வில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று அங்கு செல்லவுள்ளார்.

கியூபாவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் மாநாட்டை நிறைவு செய்து கொண்ட ஜனாதிபதி மகிந்த இன்று நியூயோர்க் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அங்கு செல்லும் ஜனாதிபதி நாளை மறுதினம் ஐக்கிய நாடுகள் பொது அமர்வில் உரையாற்றவுள்ளார். 'அபிவிருத்தியும் சமாதானத்தை ஏற்படுத்துவதில் எதிர்நோக்கும் சவால்களும்' என்ற கருவைக் கொண்டதாக ஜனாதிபதியின் பேச்சு அமையவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. (ச)

# வாழைச்சேனையில் குடும்பஸ்தர் கொலை

இராணுவத்தினரால் வாழைச்சேனையில் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். வாழைச்சேனை நாசீவன்தீவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 3 மணியளவில் இச்சம்பவம் நடந்துள்ளது.படுகொலை செய்யப்பட்டவர் முருகேசு சிவராசா (வயது-30) என்று தெரியவந்துள்ளது. அவரது சடலம் வாழைச்சேனை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-5)

# சமஷ்டி அடிப்படையிலான தீர்வே உகந்தது இராணுவ முறையில் தீர்வு காண முடியாது

## அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க



(கொழும்பு)

இலங்கையின் தேசிய பிரச்சினையை இரு பெரும் கட்சிகளும் உதைபந்தாட்டமாக்கிக் கொண்டிருக்கின்றன. இனப்பிரச்சினை உதைபந்தல்ல. சமஷ்டியின் அடிப்படையிலான தீர்வே நாட்டுக்கு உகந்தது.இராணுவ முறையில் ஒருநாளும் தீர்வு காணமுடியாது என சுற்றுலாத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் 6-வது ஆண்டு நினைவு கூரும் வைபவமும்; நாடாளுமன்றத்தில் அஷ்ரப் 3 ஆம் 4 ஆம் பகுதிகள் நூல் வெளியீட்டு வைபவமும் நேற்று முன்தினம் மாலை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

தமிழர்களுக்கும் (03 ஆம் பக்கம் பார்க்க)

# உண்ணாவிரதமும் செப வழிபாடும்

காணாமல் போனோர் மற்றும் ஜிம்புறவுண் அடிகளாரைத் தேடி உண்ணாவிரதமும் செப வழிபாடும் நாளை செவ்வாய்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்வழிபாடு நாளை காலை 10 மணி முதல் 3 மணிவரை புனித மரியன்னை தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு யாழ்.ஆயரின் கூட்டுத் திருப்பலியும் பிற்பகல் 2 மணிமுதல் 3 மணி வரை பொது வழிபாடும் நற்கருணை ஆசீரும் நடைபெறும். இதற்கான ஏற்பாட்டை நீதி சமாதானத்திற்கான ஆணையம் மேற்கொண்டுள்ளது. (ச-5)

# உணவு விநியோகம் குறித்து செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட செயலகத்தில் உலர் உணவு மற்றும் உணவுப் பொருட்கள் விநியோகம் சம்பந்தமாக கலந்துரையாடல் நேற்றுக் காலை 10 மணிக்கு யாழ்.அரச அதிபர் க. கணேஷ் தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலுக்கு யாழ்.மாவட்டத்தின் சகல உதவி அரசாங்க அதிபர்கள், பிரதேசசெயலர்கள் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலின் போது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட பொருட்கள், இருப்பில் உள்ள பொருட்கள் தற்போது வழங்கப்படவுள்ள உலர் உணவு மற்றும் வெதுப்பகங்களுக்கு விநியோகிக்கப்படும் மா என்பன தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டது. (ச-133)

# தீவகப் பகுதிகளில் சுற்றிவளைப்பு

## உணவுப் பொருட்கள் திரும்பின

(யாழ்ப்பாணம்)

சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதால் நேற்று தீவகத்திற்கான போக்குவரத்துக்கள் தடைசெய்யப்பட்டன. நேற்றுக் காலை முதல் தீவகத்திற்குள் செல்லவோ அங்கிருந்து வரவோ கடற்படையினரால் அனுமதிக்கப்படவில்லை.

மக்கள் நீண்ட நேரம் காத்திருந்தபோதிலும் நேற்று மாலைவரை அனுமதிக்கப்படவில்லை எனக் கூறப்பட்டது. இதேவேளை தீவகத்திற்கான உணவுப் பொருட்களை ஏற்றிச் சென்ற லொறிகளும் திருப்பியனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதல் காரணமாக தீவகத்திற்குச் சென்ற அரச ஊழியர்கள் திரும்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)




ஜேர்மனியில் 28 நாட்களாக சாவிலும் வாழ்வோம் கவனயீர்ப்பு போராட்டம் பிரிமன் நகரில் நடைபெற்றது. நேற்று மதியம் 12 மணிக்கு ஆரம்பித்த இப்போராட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் அவர்கள் பொதுச் சுடர் ஏற்றி ஆரம்பித்து வைத்ததுடன் சிறப்புரையும் ஆற்றினார்.



டீசல் முடிவடைந்துள்ள நிலையில் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் தரித்து நிற்கும் பேருந்துகளை படத்திற் காணலாம்.

படம்:-திலீபன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கூட்டத்தில் கூடிநின்று
கூவிப் பிதற்றலன்றி
நாட்டத்தில் கொள்ளாரடி – கிளியே
நாளில் மறப்பாரடி
–சுப்பிரமணிய பாரதியார்.

வலம்புரி

# ஆணைக்குழுவும் காணாமல் போனால் யாரிடம் முறையிடுவது?

நாட்டின் பல பாகங்களிலும் ஆட்கடத்தல், காணாமல் போதல் அதிகரித்து வருவதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவும் பொலிஸ் திணைக் களமும் தெரிவித்துள்ளன.

கடத்தல் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் அது பற்றி விசாரிப்பதற்கு ஆணைக்குழு நியமிக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடவடிக் கை எடுத்துள்ளதாக அவரோடு தொடர்புடைய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஆணைக்குழு அமைத்தல், விசாரணை நடத் துதல் இவையெல்லாம் வெளிநாடுகளைச் சமா ளிக்கும் கதைகளேயன்றி இதனால் இலங்கை யில் யாருக்கும் இலாபம் கிடைக்கப்போவதில்லை.

ஆட்கடத்தல், காணாமல் போதல் குறித்து மனித உரிமை அமைப்புக்கள் குரல் கொடுத்த தும்-அதுபற்றி உடனடியாக விசாரணை நடத்து வதற்கு ஆணைக்குழு அமைப்பதாக அரசு அறி வித்தல் விடும். அந்த அறிவித்தலோடு மனித உரி மை அமைப்புக்கள் அடங்கிக்கொள்ளும். இதற் கும் காரணம் உண்டு.

அதாவது வளர்ச்சியடைந்த நாடுகள் தனது நாட்டில் ஆணைக்குழு அமைக்குமாயின் அங்கு சுதந்திரமான-நீதியான விசாரணை நடை பெறும்.

ஆணைக்குழு வெளியிடும் தகவல்கள் நிறுத் திட்டமாக இருப்பதுடன், சம்பந்தப்பட்டவர்கள் நீதி யின்முன் நிறுத்தப்படுவார்கள்.

அதனால் அங்கு ஆணைக்குழு அமைத்தல் என்பது மிகப் பெரியதொரு விடயமாகும். சுருங் கக் கூறின் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஆணை க்குழு அமைத்தால் அது மக்களாலும் ஊடகங்க ளாலும் உன்னிப்பாக அவதானிக்கப்படும் பெரிய தொரு விடயமாகவே இருக்கும்.

இதனால் அங்கு ஆணைக்குழு நீதியை நிலை நாட்டுவதற்காக-இழந்தவர்களுக்கு நஷ்ட ஈட்டை பெற்றுக் கொடுப்பதற்காக ஆட்சியிலிருப்பவர்கள் மன்னிப்புக் கேட்பதாக, அன்றி பதவியிழந்து போவதான தீர்ப்பே கிடைக்கும்.

இதனையே இலங்கையில் அமைக்கப்படும் ஆணைக்குழுக்களும் செய்யும் என உலக நாடு களும் சர்வதேச அமைப்புக்களும் மனித உரிமை நிறுவனங்களும் நினைக்கின்றன.

ஆனால் இலங்கையில் அமைக்கப்படும் ஆணைக்குழுக்கள் ஓய்வு பெற்ற பெரிய தலை கள் சிலவற்றிற்கு பதவியும் சம்பளமும் கொடுப் பதற்காகவே அமைக்கப்படுகின்றன என்ற உண் மை தெரிவதில்லை.

இந்த ஆணைக்குழுக்கள் யாரால் நியமிக்கப் பட்டனவோ அவர்களுக்குச் சார்பாகவே தீர்ப்பும் வழங்கப்படும்.

பாதிக்கப்பட்டவர்கள், இழந்தவர்கள் எந்த நிவாரணமும் பெற்றதாக இலங்கையின் வரலா ற்றில் இல்லை.

வழமையில் காணாமல் போனவர்களை கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட ஆணைக்குழு க்கள் காணாமல் போவதே வழமை.

அந்த வழமைக்கு இந்த ஆணைக்குழு விதி விலக்காக என்ன?

# ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கிணங்க கதவடைப்புப் போராட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

கொழும்பில் இடம்பெறும் கடத்தல்களை உடனடியாக நிறுத்தக் கோரி நாளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட் டிருந்த கதவடைப்புப் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் இரவு கேட்டுக் கொண்டதற்கிணங்க மகிந்த நாடு திரும்பும் வரை பிற்போடுவதென ஏற்பாட்டுக் குழு தீர்மானித்தது.

கியூபா சென்றுள்ள மகிந்த ராஜபக்ஷ, கொழும்பில் கத வடைப்பு மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுவதை அறி ந்து தனது சகோதரர் பசில் ராஜபக்ஷ மூலமாக கதவடைப்புக் கான ஏற்பாடுகளை மேற்கொண்ட அரசியல்வாதிகள் சிலரு டன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்த ஆலோசனைகளின்போதே கதவடைப்பை மேற் கொள்ள வேண்டாம் எனவும் கடத்தல்களைத் தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டது.

இனிமேல் இப்படியான கடத்தல் சம்பவங்கள் இடம்பெறா மல் தாம் பார்த்துக் கொள்வார்என்றும் ஜனாதிபதி தரப்பிலி ருந்து உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-5)

# பேசுவதற்கு நான் தயார் விடுதலைப்புலிகள் தயாரா?

## ஜனாதிபதி மகிந்த கேள்வி

பேச்சுவார்த்தைக்கு நான் தயார்; விடுதலைப்புலிகள் தயாரா? என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேள்வி எழுப்பி யுள்ளார்.

அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற் காகச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பி.பி.ஸியின் ஆங்கில சேவையான வேல்ட் ருடே நிகழ்ச்சிக்காக வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அளித்த செவ்வியில் முக்கிய சில பகுதிகள் வரு மாறு;

*பி.பி.ஸி:*- பேச்சுவார்த்தையில் பேசுவதற்கு முன்மாதிரி யான சரத்து இருக்கிறதா?

*ஜனாதிபதி:*- ஆம், அரசியல் தீர்வு ஒன்றை அவர்களுக் குக் கொடுப்பதற்கு நாங்கள் தயார்.

பி.பி.ஸி:- என்ன மாதிரியான தீர்வாக இருக்கும் ஐயா. ஏன் என்றால்இதுவரைக்கும் நீங்கள் வைத்த தீர்வு எதுவும் எடுபடவில்லையே?

*ஜனாதிபதி:*- இல்லை, இல்லை இப்பொழுது எங்களிடம் எல்லாக் கட்சிகளும் இருக்கின்றன. அந்தத் தீர்வைப் பற்றிப் பேசி புலிகளிடம் ஒரு தீர்வை ஏற்படுத்துவதற்கு எல்லாக் கட்சி களும் இருக்கின்றன. ஏன் என்றால் தென்னிலங்கையிலும் அனைவரும் ஒன்றாக வரவேண்டும். தெற்கு ஒன்றாக வரா விட்டால் புலிகள் முன்னால் எந்தத் தீர்வையும்எங்களால் வர வைக்க முடியாது.

*பி.பி.ஸி:*- அப்படி தென்னிலங்கைக் கட்சிகள் எல்லாம் ஒன்றாக வர முடியுமா?

*ஜனாதிபதி:*- தற்போதுள்ள நிலைமைக்கு ஆம் என்று தான் சொல்லுவேன். ஏன் என்றால் பல தரப்புக்கட்சிகளை நான் ஒன்றாகக் கொண்டு வந்திருக்கிறேன்.

*பி.பி.ஸி:*- புலிகளை அவர்கள் நம்புவார்களா? இல்லை நீங்கள்தான் நம்புவீர்களா?

*ஜனாதிபதி:*- ஒரு தீர்வை நான் முன்வைக்கிறேன் என் றால் அவர்கள் எங்களை நம்ப வேண்டும். நாங்கள் அவர் களை நம்ப வேண்டும்.

*பி.பி.ஸி:*- உங்களில் எத்தனையோ பேரை அவர்கள் கொன்றவர்களாச்சே?

*ஜனாதிபதி:*- புலிகள் சிங்களத் தலைவர்களை மட்டும் கொல்லவில்லை. பலரை அவர்கள் கொன்றுள்ளார்கள்.

*பி.பி.ஸி:*-உங்களுடைய படைகளும் பலரைக் கொன்று ள்ளதே? வடக்கே தேவாலயம் ஒன்று, பாடசாலை ஒன்று.

*ஜனாதிபதி:*- இல்லை, இல்லை, அது உண்மையில்லை பாடசாலை எது மீதும் குண்டு வீசப்படவில்லை.

*பி.பி.ஸி:*- உதவிப் பணியாளர்கள் கொல்லப்பட்டதற்கு உங்கள் படைகள் தான் காரணம் என்று உங்கள் மீது பக் கச் சார்பற்றவர்களால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதே? அதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?

*ஜனாதிபதி:*- அப்படிச் சொல்லாதீர்கள். இதுவரை எந்தப் பக்கச் சார்பற்ற விசாரணையும் இது தொடர்பாக நடக்கவில் லை. இப்பொழுதுதான் ஒரு தனிப்பட்ட விசாரணைக் குழு வை நான் நியமிக்கின்றேன். அதிலே பார்வையாளராக இரு ந்து கவனிப்பதற்கு பிரதிநிதிகளை அனுப்புங்கள் என்று நான் சர்வதேச அமைப்புக்களையும் உறவினர்களையும் கேட்டிருக்கிறேன் என்றார். (ச)

# மரணத்தில் ஒன்றிணைந்த புலி,ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள்

## நீதிபதி இளஞ்செழியன் தெரிவிப்பு



(கொழும்பு)

உயிருடன் இருக்கும்போது ஒன்றிணைய முடியாத விடுதலைப்புலிகள் உறுப்பினரும் ஈ.பி.டி.பி. உறுப்பினரும் மரணத்தில் இணைந்துள்ளனர் என்று வவுனியா மாவட்ட நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் பலி யான விடுதலைப்புலிகள் உறுப்பினர் ஒருவரினதும் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவ ரினதும் மரண விசாரணையின்போதே நீதிபதி எம்.இளஞ்செழியன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை காலை குருமண்காடு பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் புலிகளின் உறுப்பினர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது. அன்றைய தினம் மதியம் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர்கள் இருவரினதும் சடலங்கள் வவுனியா வைத்தியசாலை பிரேத அறை யில் அருகருகே வைக்கப்பட்டிருந்தன. இவர்கள் இருவர்களினதும் மரண விசார ணைகளை மேற்கொண்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் இரண்டு தமிழ்ப் புதல்வர்கள் மரணித்துள்ளனர். அவர்கள் ஒருவரது மரண ஊர்வலம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெறுகிறது. மற்றவரின் மரண ஊர்வலம் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இடம்பெறுகிறது.ஆனாலும் இந்த இரண்டு எதிர்த் தரப்பினரதும் சடலங்கள் பிரேத அறையில் அருகருகே வைக் கப்பட்டுள்ளன. உயிருடன் இருக்கும்போது ஒன்று சேர முடியாத இவர்கள் மரணத்தில் அருகருகே தூங்குகின்றனர் என்றார் நீதிபதி இளஞ்செழியன். (ச-5)

# சமஷ்டி அடிப்படையிலான தீர்வே உகந்தது...

பயங்கரவாதிகளுக்கும் வித்தியாசம் உண்டு. தமிழர்கள் அனைவருமே பயங்கரவாதிகள் அல்லர் என்பதை முதலில் உணர வேண்டும்.

விடுதலைப்புலிகள்அமைப்பு உலகின் பலம் வாய்ந்த இயக்கங்களில் ஒன்று. அவர்கள் ஆயுதப் போராட்டத்தை மேற்கொண்டு இருக்கிறார்கள். அவ்வாறு போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் இயக்கத்தை ஆயுதத்தைக் கை விட்டு பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என அழைப்பது வேடிக்கைக்குரியது.

இராணுவ நடவடிக்கைகள் ஒருபோதும் தீர்வினைப் பெற் றுத் தராது என்றார். சம்பூரைக் கைப்பற்றுவது முக்கிய விட யமல்ல. எனது சகோதரி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தை இராணுவத்தினர் கைப்பற்றினார்கள். கைப்பற்றுவதும் விடு வதுமாக இருப்பதுமே தொடர்கிறது.

சமஷ்டிதான் சிறந்தது இந்த நாடு எல்லோருக்கும் சொந் தமானது. சுதந்திரமான நாடு. கொழும்பில் சில இடங்களில் குண்டு வைக்கப்பட்டதற்கு விடுதலைப்புலிகள் காரணம் அல்ல என்பது எனக்குத் தெரியவந்துள்ளது. அதற்கு அரசி யல் பின்னணி இருந்துள்ளது.

இது சிங்கள நாடு என்று சொல்ல முடியாது. சிங்களப் பெரும்பான்மை உண்டு என்பதை ஏற்றுக் கொள்கிறேன். (நேற்று) பத்திரிகைகளில் பார்த்தவுடன் அதிர்ச்சி செய்திக் காத்திருந்தது. நிருபமாராவ் சீனாவுக்கு மாற்றப்பட்டுள்ளார். அவருக்குப் பதவியுயர்வு கிடைத்துள்ளது. நான் சந்தோசப் படுகிறேன். அவருக்கு எனது வாழ்த்துக்கள்.

இலங்கை தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை அவர் தவிர்க்க வேண்டும். நிருபமாராவ் தொடர்பில் பண்டாரநாய க்க குடும்பத்தின் கருத்தை நேரு குடும்பம் ஆராய்ந்துள்ள தாகவே எனக்குத் தெரிகிறது. நேரடியாகச் செல்வதுதான் எனது கொள்கை என்றார் அநுரா.

நாம் ஒரே நாட்டில் ஒரே கொடியின் கீழ் வாழ வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. அதற்காக ஒன்றுபடுவோம் எனத் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரசபைக்கான நிதி நிறுத்த ஆசிய அபிவிருத்தி வங்கி முடிவு

இலங்கை மின்சார சபைக்கு ஆசிய அபிவிருத்தி வழங்கவிருந்த 3 ஆயிரம் மில்லியன் ரூபா தொகை ரத்துச்செய்யப்பட்டுள்ளது. மின்சார சபையை சீரமைக்க இத்தொகையை வழங்க ஆசிய அபிவிருத்தி முன்வந்திருந்தது.

ஆனால் மின்சாரசபை மறுசீரமைப்புச் சட்டமுன்வடிவுக்கு ஜே.வி.பி.உள்ளிட்டவை கடும் எதிர்ப்புத் தெரிவித்தமையால் இம் முடிவு ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள மின்சக்தி அமைச்சர் ஜோன் செனிவிரட்ன ஆசிய அபிவிருத்தி வங்கியால் இரு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. ஆனால் உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் இம் மனுவை நாடாளுமன்றில் நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு தேவைப்பட்டது.

ஆகையால் நிறைவேற்றப்படவில்லை. இப்போது கடன் உதவி ரத்துச்செய்யப்பட்டுவிட்டது என்றார் அவர். மின்சார சபை மறுசீரமைப்பு மனு நிறைவேற்றப்பட்டால் அது தனியார் மயமாக்கலுக்கு வழிவகுக்கும் என்று கூறி ஜே.வி.பி.மற்றும் அதன் தொழிற்சங்கம் கடுமையாக தொடர்ந்து எதிர்த்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# இந்திய வர்த்தகர்கள் உட்பட 50 பேர் கொழும்பில் கடத்தல்

(கொழும்பு)

கொழும்பில் கடந்த இரு மாதங்களில் இந்திய வர்த்தகர்கள் உட்பட 50 இற்கும் மேற்பட்டோர் கடத்தப்பட்டுள்ளனர் என இலங்கை நகைக்கடை வர்த்தகர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு மூன்று மாதங்களில் கொழும்பில் மட்டும் 50 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

கப்பப்பணம் கொடுத்தவுடன் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். பணம் கொடுத்த பின்னரும் விடுவிக்கப்படாதோர் எண்ணிக்கை அதிகம்.

இரு மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் கடத்தப்பட்ட ஒரு வர்த்தகர் கப்பப்பணமாக 6 மில்லியன் ரூபா செலுத்தினார். ஆனால் அவர் விடுவிக்கப்படவில்லை.

இந்திய வர்த்தகர்களும் கொழும்பில் கடத்தப்படுகின்றனர். கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இந்தியரான நகைக்கடை வர்த்தகர் தனது பணியாளர் மற்றும் மகனுடன் வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த போது கடத்தப்பட்டார். ஆகையால் மிகுந்த அச்சத்துடன்தான் அனைத்து வர்த்தகர்களும் வாழவேண்டியுள்ளது. தெருவில் இறங்கி இதற்குப் போராட வேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ச-5)

# யாழ்ப்பாணத்திற்கான எரிபொருட்கள் தொடர்ந்து அனுப்பப்படுகின்றன!

## அமைச்சர் பௌசி தெரிவிப்பு

யாழ்ப்பாணத்திற்கு தேவையான எரிபொருட்கள் அனுப்பப்படுகின்றன. அங்கு தட்டுப்பாடு ஏற்படுவதற்குரிய சூழ்நிலை இல்லை என பெற்றோலிய வளத்துறை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் எரிபொருள் தட்டுப்பாடு குறித்து பி.பி.ஸிக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து எரிபொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டு வருகின்றன. ஆனால் சிலர் சந்தையில் விற்பனை செய்வதற்கு மறுக்கிறார்கள்.

கள்ளச் சந்தையில் விற்பதற்காகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக நான் நினைக்கிறேன் என்றார்.

இதேவேளை வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை பெற்றோலியக்கூட்டுத்தாபனத்திற்கு 24 இலட்சம் ரூபா பணம் செலுத்த வேண்டும். செலுத்தாததினால் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் டீசலை வழங்கவில்லை.

இதனையடுத்து பெற்றோலியக்கூட்டுத்தாபனத்துடன் தொடர்பை ஏற்படுத்தி போக்குவரத்துச் சபை எரிபொருட்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கூறினார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் எரிபொருட்கள் சந்தையில் விற்கப்படுவது குறித்து அரச அதிபருடன் தொடர்பு கொண்டு தான் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் பௌசி மேலும் தெரிவித்தார். (ச)

# மினிவான்களில் சன நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில் மினிவான்களில் மக்கள் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

அதிகளவான மக்களை மினிவான்களில் ஏறுவதால் பெரும் நெரிசலின் மத்தியில் பயணத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

டீசல் இன்மையால் போக்குவரத்துச் சபையின் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

பெற்றோல் இன்மையால் மோட்டார் சைக்கிளின் ஓட முடிவதில்லை. இந்நிலையில் மினிவான்களையே போக்குவரத்துக்கு பயன்டுத்த வேண்டுமென அவர்கள் தெரிவித்தனர்.

அதிலும் மிகுந்த நெருக்கடிக்கு மத்தியில் பயணத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளதாக சுட்டிக்காட்டினர்.

டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக மினிவான் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கடந்த மூன்று மாதத்தினுள் மட்டும் 380 பேர் தமிழகம் சென்றனர்

(மன்னார்)

வன்செயல் காரணமாக கடந்த மூன்று மாதமாக இலங்கையிலிருந்து 100 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அகதிகளாக தென்னிந்தியா சென்றுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

380 பேர் கொண்ட இக் குடும்பங்களில் 132 பேர் பெண்களாவர். இவர்கள் அனைவரும் மண்டபம் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

இவர்கள் வவுனியா, மட்டக்களப்பு,திருகோணமலை,மன்னார் போன்ற பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கடந்த டிசெம்பர் மாதம் முதல் 12 ஆயிரம் பேர் இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

# மலேசியா செல்வதற்கு விசா தேவையில்லை

(கொழும்பு)

மலேசியாவுக்குச் செல்லும் இலங்கைப் பிரஜைகள் அந்நாட்டிற்கான விசாவை மலேசியத்தூதரகத்தில் பெறும் அவசியம் இல்லை என அத் தூதரகம் அறிவித்துள்ளது.

மலேசியத் தலைநகர் கோலாம்பூருக்குச் செல்லும் இலங்கையர்,விமான நிலையத்திலேயே 30 நாட்களுக்கான விசா அனுமதியைப் பெறமுடியும் என மலேசியத்தூதுவர் நசீரா உசைன் தெரிவித்துள்ளார்.

இந் நடைமுறை அமுலில் உள்ளதாகவும் அதேபோன்று இந்தியா ,பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் தென்னாபிரிக்காவுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ச)

# திருகோணமலையில்...

வயதுக்குழந்தை மற்றும் இளைஞர் ஆகிய இருவரும் உயிரிழந்தனர். மற்றைய மூவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர். (ச-5)

# இங்கிலாந்தின்...

வேட்டிவ் கட்சியின் புதிய தலைவரான டேவிட் கெரூன் இலங்கை நிலைமை குறித்த அறிக்கையொன்றை தயாரிப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை அமைதி முயற்சிகளில் இங்கிலாந்து பிரதான பங்களிக்கூடும் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

# இந்தியப் பிரதமருடன்...

கொள்வதற்காகச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இந்தியப் பிரதமரை சந்தித்து பேசும் மேலதிக வாய்ப்புக் கிடைத்தது.

இச் சந்திப்பின்போது இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல்தீர்வைத் தேடுவதில் இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய பிரயத்தனங்கள் பற்றி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமருடன் எடுத்துக்கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அணிசேரா நாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளச்சென்ற பல நாடுகளின் தலைவர்களுடன் சிநேகபூர்வ கலந்துரையாடல்களை நடத்தினார்.

மலேசியப்பிரதமர் டெடோ செரி அப்துல்லா அஹமட் பதவி,மாலைதீவு ஜனாதிபதி மஹ்மூத் அப்துல் கையூம், வெனிசூலா ஜனாதிபதி ஹியுகோ சேவ்ஸ் பிரியஸ் ,தென்னாபிரிக்க ஜனாதிபதி தபோ,கொங்கோங் ஜனாதிபதி டெனிஸ் சஸோ மற்றும் ஹானா ஜனாதிபதி ஜோன் அஹீகும் குபூர் போன்றோரையும் ஜனாதிபதி சந்தித்துப் பேசினார்.

அணிசேரா நாடுகளின் தலைவர்களுடனான இந்த சிநேகபூர்வ கலந்துரையாடல்களின்போது இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச-5)

# மின்சார...

இதில் பிலிப் லோறன்ஸ் யாழ்.போதனா வைத்தியசாலையிலும், கொங்காதரன் தெல்லிப்பழை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் மேற்கொண்டார். சடலத்தை பிரேதபரிசோத னைக்காக யாழ். போதனா வைத்தியசலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

மின்சார திருத்தவேலைகளை மேற்கொள்வதற்காக மின்சாரசபையின் பணியாளர்கள் 24 மணி நேரமும் சேவையில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-133)

# கல்முனைக் கடற் பரப்பில்...

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க கூறியதாவது;

நேற்றுக் காலை 7.30 மணியளவில் கல்முனைக் கடற்பரப்பில்வைத்து ஆயுதக் கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்டது.

கல்முனையில் இருந்து 100-120 கடல் மைல் தொலைவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. எந்த ஒரு கொடியும் இல்லாமல் கப்பல் வருவதை அவதானித்த கடற்படையினர் விமானப்படையினருக்கு அறிவித்தனர்.

இதையடுத்து அக் கப்பலை சோதிப்பதற்காக நிறுத்துமாறு அருகில் சென்று கூறினர். ஆனால் கப்பல் நிற்கவில்லை. பின்னர் எச்சரிக்கை வேட்டுக்களை கடற்படை மேற்கொண்டது.

இதனையடுத்து கப்பலில் இருந்தவர்கள் கடற்படையின் மீது திருப்பித்தாக்குதல் நடத்தினர் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

பின்னர் விமானப்படையின் உதவி கோரப்பட்டது. தொடர்ந்து விமானப்படையும் கடற்படையும் இணைந்து தாக்குதல் நடத்தின. இச் சண்டை சுமார் 8 மணி நேரம் நடைபெற்றது.

மாலை 4.30 மணியளவில் அக் கப்பல் தாக்குதலுக்கு இலக்காகி கடலில் மூழ்கியது என்றார். மிகப்பெரிய அக் கப்பல் வானத்தில் இருந்து படமெடுக்கப்பட்டதாகவும் அது விரைவில் வெளியிடப்படும் எனவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இக் கப்பலில் இருந்து கடற்படையினரின் மீது 23 மில்லி மீற்றர் துப்பாக்கி கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இத் துப்பாக்கி விடுதலைப்புலிகளைவிட வேறு யாரிடமும் கிழக்கு கடற்கரைப் பகுதியில் கிடையாது என பிரசாத் சமரசிங்க பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

இத் தாக்குதலில் தமது தரப்பில் எந்த உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை எனவும் இத்தாக்குதலில் கப்பலில் இருந்தவர்கள் உயிரிழுந்திருக்காலம் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்ட கப்பலுக்கும் தமக்கும் தொடர்பில்லை எனவும் தாங்கள் ஆயுதங்களை அப்படிக் கடத்துவதில்லை எனவும் விடுதலைப்புலிகளின் இராணுவப்பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

தாயகக்கடற்பரப்பில் நடைபெற்ற ஒரு சம்பவம் என்பதால் சம்பவம் குறித்து விடுதலைப்புலிகளின் பாதுகாப்புச் செயலகம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார். விசாரணைகளின் முடிவு கிடைத்ததும் தகவல்கள் தெரிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார். (ச-5)

# யாழிற்கான...

தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

முகமாலையிலுள்ள கண்ணி வெடிகள், மிதிவெடிகளை அகற்றி இராணுவத்தினரால் பாதுகாப்பை உறுதிப்படுத்த நீண்ட காலம் ஏற்படும். ஆகையால் பாதுகாப்பான பூநகரியூடாக போக்குவரத்து வசதியை ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் ஹெகலிய ரம்புக் வெல தெரிவித்தார்.

இதேவேளை 2002 ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு முகமாலைப் பாதையை திறப்பதற்கு முன் பூநகரி ஊடான போக்குவரத்திற்கு முன்னர் இருந்த அரசு முயற்சி மேற்கொண்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org